1979 மார்ச் 17]

திரு. க. சுப்பு : பாயின்ட் ஆப் ஆர்டர், இங்கு எழுப்பப் பட்ட கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போதும், ஏதோ உறுப்பினர் அவர்கள் * * * என்றும் அதற்கு அமைச்சர் அவர்கள் சொன்ன பதில் அதற்கு தயாராக இல்லை என்று சொல்வது மாதிரியும் இருந்தது. இவை யெல்லாம் அனுமதிக்கப்படலாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாமரைக்கனி அவர்கள். பேசும்போது சற்று வினயமாக பேசுவதற்கு முயற்சி செய்யுங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : நான் பேசும்போது, அமைச்சரை வேலியே பயிரை மேயலாமா என்று சொல்லவில்லை, அங்குள்ள கிராம முனிசீபும் உயர்ஜாதி மக்களும் இருந்து வருவதைத்தான் குறிப்பிட்டேன். நான் ஆவேசமாக பேசினேன் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அங்குள்ள தாழ்த்தப்பட்ட மக்க ளின் நிலைமை ஆவேசப்படும்படியான நிலைமையில் இருப்பதால் தான் அப்படி சொன்னேன். நான் கூறியவை சபைக் குறிப்பு களில் இருக்கக்கூடாது என்றால் அவற்றை நீக்கிவிடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாமரைக்கனி அவர்கள் பேசும்போது குறிப்பிட்ட * * * என்று சொன்ன வாக்கி யங்களை நீக்கிவிடுமாறு உத்தரவிடுகிறேன்.

(உ) தஞ்சை மாவட்ட தாளடிப்பயிருக்கு மேட்டூர் அணை யிலிருந்து தண்ணீர் விடுவது குறித்து.

*திரு. ரெ. வீ. சவுந்தரராஜன் : தலைவர் அவர்களே ''தஞ்சாவூர் மாவட்டத்தில் 1978 அக்டோபர், நவம்பர் மாதங் களில் பெய்த பெருமழையின் காரணமாக தாளடிப் பயிர் வீணாகி மீண்டும் நடவு, நட்ட பயிர் கெடாதிருக்க 1979ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31ஆம் தேதிவரை மேட்டூர் அணையி லிருந்து தண்ணீர் விட வேண்டிய அவசியம் குறித்த'' பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மை மற்றும் பாசனத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து பாசனத்திற்குத் தண்ணீர் விடுவதை ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 28ஆம் தேதி நிறுத்தி

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்ற பெற்றது.

விடுவது வழக்கம். ஆனால், இம்முறை 1978 ஜூன் 12ஆம் தேதி நீர்த்தேக்கத்தைத் திறந்து தண்ணீர் விடுவதற்குப் பதிலாக 1978 ஜூலை 5ஆம் நாள் தண்ணீர் விடப்பட்டதன் காரண மாகவும், 1978 நவம்பர்—டிசம்பர் மாதங்களில் பெய்த மழை யினால் தாளடி பயிர்களுக்கு ஏற்பட்ட சேதத்தின் காரணமாகவும், 1979ஆம் ஆண்டு ஜனவரி 28ஆம் தேதிக்குப் பிறகும் தண்ணீர் விடுவதற்கு அரசு முடிவு செய்தது. பெரும் மழைக்குப் பிறகு, சில இடங்களில் மறுபடியும் நடவு செய்ய வேண்டியிருந்தது என்ற விஷயம் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. இதுபற்றி செறிவு வேளாண்மை அபிவிருத்தி (I.A.D.P.) கூட்டத்தில் விவாதிக்கப் பட்டது. தஞ்சை மாவட்ட ஆட்சியாளர் மற்றும் வேளாண்மை அதிகாரிகள் ஆகியோரின் இசைவோடு, 1979 பிப்ரவரி மாத இறுதிவரை தண்ணீர் விட்டால்போதும் என்று தீர்மானிக்கப் பட்டது. இவற்றையெல்லாம் கருத்திற் கொண்டு, 1979 பிப்ரவரி 28ஆம் தேதிவரை மட்டுமே மேட்டூர் நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் விடுவதற்கு அரசு ஆணை பிறப்பித்தது. அவ்விதமே 1979 பிப்ரவரி 28ஆம் தேதி மேட்டூர் நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் விடுவது நிறுத்தப்பட்டது.

*திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: தலைவர் அவர்களே, இந்தப் பெருமழையினால் தாளடிப் பயிர்கள் பாதிக்கப்பட்டு, பல விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இதுயாதிரி நஷ்டம் அடைந்த பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு எவ்வளவு விதை நெல்கள் இனாமாகக் கொடுக்கப்பட்டது? என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானம் மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் விடுவதைப்பற்றி. ஆனால் தாளடிப் பயிரிட்டவர்களுக்கு விதை வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். தனியாக ஒரு கேள்விபோட்டால், நான் பதில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆனால், தண்ணீர் விடுவதுபற்றி கேட்டால் நான் தகுந்த முறையிலே பதில் சொல்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: பேரவைத் தலைவர் அவர்களே குத்தாலம் தொகுதியில், குடவாசல் பகுதிகளைச் சேர்ந்த கருப்பூர், மாந்தை, கம்பூர், சுரைக்காவூர், சருக்கை, கிள்ளியூர், வடக்குவெளி, திருப்பாம்புரம், துளார், உக்கடை, என்னக்குடி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் தாளடிப் பயிருக்கு தண்ணீர் மார்ச்சு மாத கடைசிவரை தேவை என்றும், தண்ணீர் விடா விட்டால் பயிர் அழிந்து ஏராளமான நஷ்டம் அடைய நேரிடும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், அரசுக்கும், இதேபோல் எனக்கும் தந்தி மூலமும், மனு மூலமும் தெரிவித்

துள்ளார்கள். அவர்களின் கோரிக்கையின் அடிப்படையில்தான் இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை சென்ற மாதம் இந்த, அவையிலே கொடுத்திருந்தேன். அன்றைய தினம் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து வேறு என்ன புதிய தகவல்கள் தேவை என்பதைச் சொல்லுங்கள். வரலாறு படிக்க வேண்டாம். ஏற்கனவே அது தெரியும். புதியதாகத் தகவல் வேண்டுமென்றால், அதைக் கேளுங்கள்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மார்ச்சு 5ஆம் தேதி கலந்து பேசி, மீண்டும் தண்ணீர் தேவையானால், தண்ணீர் கொடுப்பதாக அன்றைய தினம் சொன்னார்கள். ஆனால், நேற்றைய தினம் நான் [redacted]ருக்குச் சென்றிருந்தபோது, அந்தப் பகுதி மக்கள் தண்ணீர் இல்லாத காரணத்தால் பயிர்கள் அழிந்து, சேதமடைந்துள்ளதாகச் சொன்னார்கள். எனவே, கல்லறையில் தண்ணீர் இருந்தால், இரண்டு நாட்களுக்கு அரசலாறு பகுதிக்குதண்ணீர் கொடுக்கப்படுமா? அல்லது மேட்டூரிலிருந்து இரண்டு நாட்களுக்கு, இந்த அரசலாறு பகுதிக்கு தேவையான தண்ணீர் விடுவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் அணையிலிருந்து வருடா வருடம் எப்போதுமே ஜனவரி 28ஆம் தேதி வரையிலும் தண்ணீர் கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால், இந்த ஆண்டில் குறிப்பாக 1978 நவம்பர், டிசம்பர் மாதங்களில் பெய்த மழையின் காரணமாக, தாளடிப் பயிர் பாதிக்கப்பட்டிருக்கின்றது என்ற காரணத்திற்காக, ஜனவரி 28ஆம் தேதிக்குப் பதிலாக, பிப்ரவரி 28ஆம் தெதிவரையில் தண்ணீர் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும், ஐ.ஏ.டீ.பி. (இன்டென்சிவ் அக்ரிகல்சுரல் டெவலெப்மெண்டு புரோக்ராம்) கூட்டத்திலே ஆட்சியாளர் அவர்களும், அங்கே இருக்கக்கூடிய விவசாயத்துறை இயக்குநர் அவர்களும், மற்றுமுள்ளவர்களும் கலந்து கொண்டு பேசிய கூட்டத்தில், பிப்ரவரி 28ஆம் தேதி வரையில் தண்ணீர் விட்டால் போதும் எனறு முடிவு செய்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் இராசமாணிக்கம் அவர்கள் சொல்வதுபோல் இங்கே மேட்டூரிலிருந்து தண்ணீர் விட்டால், அந்த அணையிலிருந்து இங்கே தஞ்சைக்கு எட்டுவதற்கு ஏறத்தாழ 4, 5 நாட்களுக்கு மேலாகும். 100 ஏக்கர் தண்ணீர் விடுவதற்கு, 10,000 ஏக்கருக்குரிய தண்ணீர் வீணாகி விடும். இதை மனதிலே அவர்கள் வைத்துக்கொண்டு, நமக்கு நாளைக்கு தண்ணீர் வேண்டுமென்று சொல்கிறபோது,

[திரு. ப. குழந்தைவேலு] [1979 மார்ச் 17

இதே உறுப்பினர் எங்களுக்கு ஏன் தண்ணீர் கொடுக்கவில்லை என்று கேட்க மாட்டாரா என்ற வினாவை அவரே எழுப்பி, அதற்கு பதில் என்ன என்பதை அவர்களே புரிந்து கொள்வார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில் தண்ணீர் வீணாக்கக் கூடாது என்ற எண்ணத்தோடு, அவர்களும் இந்த அரசுக்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(எ) அன்னப்பநாயக்கன் அணை கால்வாயில் ''துபா'' வைத்து நீர் கொண்டு செல்ல அனுமதி மறுப்பது குறித்து.

திரு க. சுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே, ''செங்கல்பட்டு மாவட்டம், அன்னப்ப நாயக்கன் குப்பத்தைச் சேர்ந்த ராமநாயக்கன் கண்டிகை கிராமத்தில் கட்டப்பட்டுள்ள அன்னப்ப நாயக்கன் அணை கால்வாயில் ''துபா'' வைத்து நீர் கொண்டு செல்ல அனுமதி மறுக்கப்பட்டதால் நெல், வேர்கடலை, மிளகாய், சர்க்கரை வள்ளிக்கிழங்கு, கேழ்வரகு போன்ற பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து'' மாண்புமிகு வேளாண்மை, மற்றும் பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தை வேலு: தலைவர் அவர்களே, நடைமுறை விதிகளின்படி பொதுப்பணித்துறை நீர்ப்பாசன ஆதாரங்களிலிருந்து (ஆறு, அணைக்கால்வாய்கள் உள்பட) நேரே தனியாரது குழாய்/வடிகால்கள் வழியே நீரை எடுத்துச் செல்வது சட்டவிரோதமாகும். இந்நிலையில் அன்னப்பநாயக்கன் அணையின் மேற்புறம் இடது கரையில் ''துபா'' வைத்து நீர்கொண்டு செல்வது முறையற்றதாகும். ஆகையால் விதிமுறைக்கு எதிராக தண்ணீர் எடுப்பது தடை செய்யப்பட்டது.

[பிற்பகல் 12-20]

திரு. க. சுப்பு: இந்தக் கால்வாய் கட்டப்படுகிற நேரத்தில் ஏற்கனவே போய்க்கொண்டிருந்த ஓடையில் இருந்து ஊர் மக்கள் துன்ரை எடுத்து விவசாயம் செய்து கொண்டிருந்தார்கள். இந்தக் கால்வாயை எடுத்து அரசாங்கம் அதைக் கட்டுவதற்கான வேலைகளில் ஈடுபடும்போது தங்களுக்கும் தண்ணீர் விட வேண்டுமென்று அவர்கள் கேட்டு அரசாங்கமே குழாய் வைத்துக் கொடுத்து அவர்கள் விவசாயம் செய்து வந்தார்கள். ஆனால் திடீரென்று ஒரு எஞ்சினியரும் அசிஸ்டென்ட் எஞ்சினியரும் வந்து அவ்வாறு தண்ணீர் எடுக்கக்கூடாது என்று கூறி குழாயை உடைத்துவிட்டு சென்று விட்டனர். தலைமைப் பொறியாளரை நானே போய்ப்பார்த்து மகஜர் தந்திருக்கிறேன். அந்த மகஜர் உங்கள் கைக்குக் கிடைத்திருக்கிறதா என்று